


| | | |
|---|---|---|
| 07.052026 | 'சாந்தகுணம் இழந்த' யேசபேல்களை, கர்த்தர் ஏற்றுக்கொள்வதில்லை! | 19வது வாரம் |



யேசபேல் ஒரு பெண்மணி! எலியாவின் காலத்தில் ஜீவித்தாள்! (2இராஜா.9:22). இந்த யேசபேலின் விருப்பமெல்லாம், தன் செல்வாக்கைப் பயன்படுத்தி, பிறரை ஆதிக்கம் செய்வதேயாகும். இவ்வாறு தன் ஆதிக்கத்தின் மூலம், கர்த்தருடைய பரிசுத்தவான் களையும், அந்த சபையின் ஊழியனையும்கூட தான் விரும்பியதைச் செய்யும்படி வைத்து விடுவாள் இந்த யேசபேல்!

இந்த யேசபேல், பிறர் தன் மீதே கவனம் செலுத்த விரும்புவாள்! மேலும் தன்னையும், தன்னை முக்கியப்படுத்தும் விருப்பங்களையும் ஜனங்கள் மத்தியில் உயர்த்தி அதை முயற்சிப்பாள். தன்னை ஒரு தீர்க்கதரிசி என்பாள்! சொப்பனம் கண்டேன் என்பாள்! வெளிப்பாடு கிடைத்தது என கூறுவாள்! கர்த்தர் எனக்கு பேசினார் என்பாள்! தன் அகந்தையை மறைத்து ஆவிக்குரியவளைப் போல் நடிப்பாள்!

சாந்தமும் அமைதலுமான ஆவியினால் உடுத்திக் கொண்டு, வேதவாக்கியத்தின்படி அடங்கியிராமல், தன்னை ஓர் தீர்க்கதரிசியைப்போலவும், பெரிய ஆவிக்குரியவளைப் போலவும் உயர்த்த விரும்புகிற எந்த ஸ்திரீயையும், நாம் விழிப்பான கண்களோடுதான் கண்காணிக்க வேண்டும்.

- ரத்னம்